தமிழகம் முழுவதும் ஐந்தாண்டுகளில்

# ரூ.19,694 கோடியில் 4.29 லட்சம் வீடுகள் 25.56 லட்சம் பட்டாக்கள் விநியோகம்

## தமிழக அரசு பெருமிதம்

**சென்னை**

திமுக ஆட்சியில் 5 ஆண்டுகளில் ரூ.19,694 கோடியில் ஏழைகளுக்காக 4,29,394 வீடுகள் கட்டப்பட்டுள்ளதுடன், 25.56 லட்சம் ஏழை குடும்பங்களுக்கு இலவச வீடு மனை பட்டா வழங்கப் பட்டுள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளி யிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்தில் உள்ள குடிசைகள் எல்லாவற்றையும் அகற்றிவிட்டு எல்லோர்க்கும் கான்கிரீட் வீடுகள் கட்டித்தர வேண்டும் என்பது திராவிட மாடல் அரசின் இலக்கு. இதற் காக 2030-ம் ஆண்டுக்குள் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட வேண்டும் என முடிவு செய்துள்ளது.

ஏழை மக்கள் வீடு கட்டிக்கொள்ள தலா ரூ. 3 .50 லட்சம் வீதம் 2 லட்சம் குடும்பங்களுக்கு ரூ.7 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டத்தை அனுமதித் துள்ளது. இத்திட்டத்தின்கீழ் இரண்டே ஆண்டுகளில் 2 லட்சம் வீடுகளில் 1,79,850 கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டுள் ளன. மீதி வீடுகள் கட்டப்படுகின்றன. இந்த ஆண்டில் மேலும் 1 லட்சம் வீடு கள் ரூ. 3,500 கோடியில் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016- 21 ஐந்து ஆண்டுகளில் முந்தைய ஆட்சியில் 1 லட்சம் வீடுகள் தான் கட்டப்பட்டன. ஆனால் 2024-26 இரண்டே ஆண்டுகளில் 1,79,850 வீடு கள் கட்டிமுடிக்கப்பட்டு, மேலும் 1,20,150 வீடுகள் கட்டப்படுகின்றன.

கலைஞர் கனவு இல்லம் திட்டம் மட்டுமல்ல, இலங்கை தமிழர்களுக்கு ரூ.589 கோடியில் 10,045 நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு 7,469 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் ரூ.3,058 கோடியில் 2.63 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அடுக்குமாடி குடியிருப்புகள் திட்டத்தின்கீழ் ரூ.8,384 கோடியில் 58,211 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, மேலும் 53,467 வீடு களின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்தில் முந்தைய 2016-2021 கால ஆட்சியில் 27,688 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டன. ஆனால், 2021-26 திமுக ஆட்சியில் 58,211 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு சாதனை நிகழ்த்தப் பட்டுள்ளது. அயோத்திதாச பண்டிதர் குறியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.482 கோடியில் 5281 உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வீட்டுமனை பட்டாக்கள்**

கடந்த 5 ஆண்டுகளில் 23.56 லட்சம் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை பட் டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பழங்குடி யினருக்கான தொல்குடி திட்டத் தில் ரூ. 221 கோடியில் 7,674 பேருக்கு வீடுகள் கட்டப்பட்டுளன. ஒற்றைச்சாளர முறை திட்டத்தில் 24,446 மனைப்பிரிவு விண்ணப்பங்களுக்கும், 2002 கட்டிட அனுமதி விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமாக திமுக அரசு 5 ஆண்டு களில் ரூ.19,694 கோடியில் 4,29,394 வீடுகளைக் கட்டியுள்ளது. ரூ.482 கோடியில் ஆதிதிராவிடர் வாழும் பகுதி களில் 5,281 கட்டமைப்புப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 25.56 லட்சம் ஏழைகளின் குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங் கப்பட்டுள்ளன.



**பொது அறிவு:** இரவில் இரை தேடும் சிறு பாலூட்டி விலங்கு தேவாங்கு (Slender loris). இது மனிதர்களும் குரங்குகளும் உள்ள முதனி என்னும் வரிசையைச் சேர்ந்த விலங்காகும். பெரும்பாலும் இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள மழைவளக் காடுகளில் மரங்களிடையே இவை வாழ்கின்றன.

### கிராமப்புறங்களிலும் மானிய விலையில் நாப்கின்கள்

# ‘முதல்வர் மருந்தகங்கள்’ மாநிலம் முழுவதும் விரிவாக்கம்

## உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல்

■ சென்னை

‘கிராமப்புறங்களிலும் மானிய விலையில் நாப்கின்கள் கிடைக்கும் வகையில் ‘முதல்வர் மருந்தகங்கள்’ திட்டம் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்படும்’ என உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தாம்பரம் வழக்கறிஞர் லட்சுமி ராஜா என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த பொதுநல மனுவில், “ஏழை, எளிய கிராமப்புற பெண்களும் பயன்பெறும் வகையில் ரேஷன் கடைகளில் நாப்கின்களை மானிய விலையிலோ அல்லது இலவசமாகவோ வழங்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கில் தமிழக அரசு தரப்பில், கிராமப்புற பெண்களுக்கு கிராம சுகாதார செவிலியர்கள் மூலமாகவும், பள்ளி மாணவியர் மற்றும் பிரசவித்த இளம் தாய்மார்களுக்கு இலவசமாகவும் நாப்கின்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பெரும்பாலான பெண்கள் பயன் அடைந்து வருவதாக ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு முந்தைய தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ஆஜராகி, “தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 1000 ‘முதல்வர் மருந்தகங்கள்’ தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில் மானிய விலையில் நாப்கின்கள் விற்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கும் மானிய விலையில் நாப்கின்கள் கிடைக்கும் வகையில் ‘முதல்வர் மருந்தகங்கள்’ திட்டம் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்படும்” என்றார்.

அதையடுத்து, இந்த மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசுக்கு அறிவுறுத்திய நீதிபதிகள், விசாரணையை ஏப். 29-க்கு தள்ளிவைத்துள்ளனர்.

அன்றைய தினம், கூடுதலாக தொடங்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகங்கள் குறித்த விவரங்களை அரசு தெரிவிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

**பத்தாம் நூற்றாண்டில் ஆதித்த கரிகாலன் காஞ்சிபுரத்தில் தன் வெற்றியின் அடையாளமாக பொன்மாளிகை கட்டினார். அந்த மாளிகை கைலாசநாதர் கோயிலுக்கும், ஏகாம்பரநாதர் கோயிலுக்கும் இடையில் இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.**



### இளைஞர்கள் அறிந்துகொள்ளும் நோக்கில்

# ‘பாரதியார் இல்லம்’ வலைதளப் பக்கம்

## இன்ஸ்டாகிராமில் தமிழக அரசு தொடக்கம்

■ சென்னை

பாரதியார் குறித்து இளைஞர்கள் தெரிந்து கொள்வதற்காக இன்ஸ்டாகிராமில் ‘பாரதியார் இல்லம்’ புதிய வலைதள பக்கத்தை தமிழக அரசு தொடங்கியுள்ளது.

பெண்களின் உரிமை, சமத்துவம் மற்றும் சுதந்திரத்துக்காக ஒரு நூற்றாண்டுக்கு முன்பே கவிதை வாயிலாக உரத்த குரல் கொடுத்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். கவிஞராக மட்டுமின்றி, விடுதலைப் போராட்ட வீரராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தவர். குறிப்பாக, பெண்கள் விடுதலை, சாதி ஒழிப்பு, தேசபக்தி போன்ற உயரிய சிந்தனைகளைத் தனது படைப்புகள் மூலம் விதைத்தவர். “அச்சமில்லை அச்சமில்லை”, “வந்தே மாதரம்” போன்றவை அவரது காலத்தால் அழியாத பாடல்கள்.

பாரதியார் தனது இறுதி நாட்களை சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் அருகில் உள்ள இல்லத்தில் கழித்தார். தமிழக அரசு ‘பாரதியார் நினைவு இல்லமாக’ அதை சிறப்பாகப் பராமரித்து வருகிறது. அதேபோல, அவர் வாழ்ந்த எட்டயபுரம் மற்றும் வாராணசி இல்லங்களும் அரசின் மூலம் நினைவு இல்லங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் பாரதியாரின் வாழ்க்கை குறிப்புகள், அரிய புகைப்படங்கள், அவர் பயன்படுத்திய பொருட்கள் பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாரதியாரின் சிந்தனைகளையும், அவரது வாழ்க்கை வரலாற்றையும் இன்றைய தலைமுறையினரும், இளைஞர்களும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில், தமிழக அரசின் செய்தித் துறை சார்பில் ‘பாரதியார் இல்லம்’ என்ற புதிய இன்ஸ்டாகிராம் வலைதளப் பக்கம் தொடங்கப்பட்டுள்ளது. https://www.instagram.com/bharathiyar_illam?igsh=NTVweHVrMml0anox என்ற இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பாரதியாரின் கவிதைகள், அரிய வரலாற்றுக் குறிப்புகள், இதுவரை பலரும் பார்த்திராத புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட உள்ளன.

காஞ்சிபுரத்தை 11-ம் நூற்றாண்டில் சோழர்கள் ஆட்சி செய்தனர். அப்போது காஞ்சிபுரம் சிறந்த நகரம் என்ற பொருள் படும்படி புரவர நகரம் என்று அழைக்கப்பட்டது. சோழர்களின் வட பகுதியான ஜெயம்கொண்ட சோழமண்டலத்தின் கல்வி மற்றும் வணிக மையமாக காஞ்சிபுரம் விளங்கியது.

CHENNAI

ஆவடியில் கடந்த 1955-ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் அகில இந்திய மாநாடு நடைபெற்றது. யூகோஸ்லாவியா அதிபர் மார்ஷல் டிட்டோ சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இம்மாநாட்டில்,'சமதர்ம சமுதாய அமைப்பை' உருவாக்குவதே காங்கிரஸின் குறிக்கோள் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொது அறிவு : நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நார்வே ஆகும். மே மாத இறுதி முதல் ஜூலை வரை, நார்வேயின் வடக்கு ஆர்க்டிக் வட்டத்தில் சூரியன் மறைவதே இல்லை, இதனால் 24 மணி நேரமும் வெளிச்சம் இருப்பதால் அவ்வாறு அழைக்கப்படுகிறது.

**மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிரான**

# நம்பிக்கையில்லா தீர்மானம் மீது நாளை விவாதம்

■ புதுடெல்லி

மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது மக்களவையில் நாளை விவாதம் நடைபெற உள்ளது.

நாடாளுமன்ற முதல் கட்ட பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஜனவரி 28-ம் தேதி முதல் பிப்ரவரி 13-ம் தேதி வரை நடைபெற்றது. கடந்த பிப்ரவரி 2-ம் தேதி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவையில் பேசினார். அப்போது முன்னாள் ராணுவ தளபதி நரவனேவின் நினைவுக் குறிப்பின் அடிப்படையில் எழுதப்பட்ட புத்தகத்தை மேற்கோள் காட்டி, சீன எல்லைப் பிரச்சினை குறித்து பேச அவர் முயன்றார். அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதன் காரணமாக மக்களவை, மாநிலங்களவையை எதிர்க்கட்சிகள் தொடர்ந்து முடக்கின. இதுதொடர்பாக மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா



வுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கடந்த பிப்ரவரி 10-ம் தேதி நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் வழங்கின. இதில் காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி, ராஷ்டிரிய ஜனதா தளம், கம்யூனிஸ்ட் கட்சிகளை சேர்ந்த 118 எம்.பி.க்கள் கையெழுத்திட்டு உள்ளனர். திரிணமூல் காங்கிரஸ் எம்.பி.க்கள் நோட்டீஸில் கையெழுத்திடவில்லை.

இந்த சூழலில் பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-வது அமர்வு நாளை தொடங்கி ஏப்ரல் 2-ம் தேதி வரை நடைபெற உள்ளது. முதல் நாளில் சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

சபாநாயகருக்கு எதிராக தீர்மானம் அளிக்கப்பட்ட நாள் முதலே அவர் மக்களவையை நடத்தவில்லை. மூத்த எம்.பி.க்களே அவையை நடத்தி வருகின்றனர். நாளைய தினமும் அவர் மக்களவையை வழிநடத்த மாட்டார். அவையில் ஆளுங்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பார்.

மக்களவையை நடத்தும் மூத்த எம்.பி., சபாநாயகருக்கு எதிரான தீர்மானத்தை ஏற்பதா, வேண்டாமா என்பது குறித்து முதலில் வாக்கெடுப்பு நடத்துவார். 50 எம்.பி.க்கள் எழுந்து தீர்மானத்தை ஆதரித்தால் நம்பிக்கையில்லா தீர்மானம் மீது விவாதம் தொடங்கும். விவாதம் நிறைவடைந்த பிறகு இறுதியாக வாக்கெடுப்பு நடத்தப்படும்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்ற அவையில் இருக்கும் எம்.பி.க்களில் 50 சதவீத எம்.பி.க்களின் ஆதரவு தேவை. மக்களவையில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 293 எம்.பி.க்கள் உள்ளனர். காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு 238 எம்.பி.க்கள் (திரிணமூல் கட்சியையும் சேர்த்து) மட்டுமே உள்ளனர். எனவே, சபாநாயகருக்கு எதிரான தீர்மானம் தோல்வி அடைவது உறுதி என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது மக்களவையில் விவாதம் நடைபெற உள்ள நிலையில், பாஜக மற்றும் காங்கிரஸ் சார்பில் கொறடா உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. மார்ச் 9 முதல் 11-ம் தேதி வரை எம்.பி.க்கள் அனைவரும் அவையில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று இரு கட்சிகளும் தங்களது எம்.பி.க்களுக்கு கண்டிப்புடன் உத்தரவிட்டுள்ளன.

### திரிணமூல் திடீர் ஆதரவு

சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் அளிக்கப்பட்ட போது திரிணமூல் காங்கிரஸின் 28 எம்.பி.க்கள் கையெழுத்திடவில்லை. தற்போது திடீர் திருப்பமாக தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு திரிணமூல் எம்.பி.க்களுக்கு அந்த கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜி உத்தரவிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.